**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்**

**முன்னிலை—திருமதி. P. தீபா, B.A.B.L.L.L.M.,**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்ற நடுவர், மாதவரம்**

**2026—ம் ஆண்டு மே மாதம் 26—ம் நாள் செவ்வாய்கிழமை**

**CC.No.136/2020**

**( CC.No. 262/2019 ( JMC, Tiruvottiyur ) in**

**CC.No.136/2020 ( DM CUM JMC Madhavaram )**

மாநில அரசு உதவி ஆய்வாளர் மூலமாக
எம்3 புழல் காவல் நிலையம்
குற்ற எண்.2001/2017

…….குற்றமுறையீட்டாளர்/வாதி

// எதிர் //

அருண்குமார், வயது.37,

த/பெ.கோவிந்தராஜ்,
எண்.195, திருவள்ளுவர் தெரு,
கதிர்வேடு, புழல்,
சென்னை—66.

.............எதிரி

CASE SUMMARY

| SI.No | Particulars | Details |
|---|---|---|
| I. | Period of Remand of Accused | 23.10.2017 – 31.10.2017 |
| II. | Date of filling of Final Report in court | 11.06.2019 |
| III. | Date of questioning of accused under section 313(1) (a) of Cr.p.c | 18.09.2024 |
| IV | Filling of Miscellaneous petitions and their result | Nil |
| V. | Date of examination in Chief and cross examination of witnesses | PW1- 28.01.2025<br>PW2- 12.02.2025<br>PW3 – 12.03.2025<br>PW4 – 24.07.2025 |
| VI. | Date of examination of accused under section 313(1)(b) of Cr.p.c | 12.05.2026 |

DEEPA P Digitally signed by DEEPA P

| | | |
|---|---|---|
| VII. | Details of abscondence of accused and his appearance / production | Nil |
| VIII. | Grant of stay buy superior court and the result thereof | Nil |

இவ்வழக்கானது 11.06.2019–ம் தேதி அன்று இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு இறுதியாக 26.05.2026–ம் தேதி அன்று என் முன்பாக விசாரணைக்காக வந்ததில் குற்றமுறையிடுபவர் தரப்பில் அரசு உதவி வழக்கறிஞர் நிலை–2 அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.V.தமிழ் அவர்கள் முன்னிலையாகியும் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டு இருதரப்பு வாதுரையும் கேட்கப்பட்டு இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

<u>**தீர்ப்புரை**</u>

இவ்வழக்கில் கடந்த 23.10.2017–ம் தேதி 12.30 மணியளவில் வாதி சுரேஷ்பாபு என்பவர் வேலை முடித்து வீட்டிற்கு செல்வதற்காக புழல் சைக்கிள் ஷாப் நாகாத்தம்மன் கோயில் அருகில் நடந்து வந்தபோது இவ்வழக்கின் எதிரியான பென்னி (எ) அருண்குமார் என்பவர் வாதியை வழிமறித்து நிறுத்தி பணம் கேட்டுள்ளார் என்றும், வாதி பணம் இல்லை என்று சொன்னதும் எதிரி தன் இடுப்பில் மறைத்து வைத்திருந்த கத்தியை உருவி வாதியின் கழுத்தில் வைத்து இந்த கதிர்வேடு ஏரியா பென்னியை பத்தி உனக்கு தெரியாதா இந்த ஏரியாவே என்னை பார்த்தா நடுங்குன்டா எனக்கூறி வாதியின் சட்டைப்பாக்கெட்டில் கைவிட்டு வாதி வைத்திருந்த பணம் ரூ.500/–ஐ எடுத்துக் கொண்டு போலீசில் கம்பிளைண்டு கொடுத்தீன்னா உன்னை பார்க்கிற இடத்தில் வெட்டுவேன் என கத்தியைக் காட்டி மிரட்டி சென்று எதிரி காரணமாக இருந்து குற்றம் புரிந்துள்ளார். எனவே எதிரி மீது சட்டப்பிரிவுகள் 341,384,506(ii) இதச பிரிவின் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்ததாக எம்.3 புழல் காவல் ஆய்வாளர் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2.** எதிரியிடம் இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் வழக்கின் ஆவண நகல்கள் அனைத்தும் குவிமுச பிரிவு 207–ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

**3.** பின்னர் வழக்கு ஆவணங்களை பரீசிலனை செய்தும், எதிரி மீது இதச பிரிவு 341,384,506(ii) கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் பற்றி வினவ எதிரி குற்றத்தை பொய் என மறுத்துரைத்தார். எனவே அரசு தரப்பு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

**4.** அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டும் ஆவணங்கள் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரை குறியீடு செய்யப்படுகிறது.

DEEPA P Digitally signed by DEEPA P

5. <u>அரசு தரப்பு வழக்கின் சாட்சிகளின் சாட்சியத்தின் விபரம் பின்வருமாறு</u>

**அ)** அ.சா.1 போஸ் தனது சாட்சியத்தில், தான் காவாங்கரையில் குடியிருந்து வருவதாகவும், தனக்கு புகார்தாரர் சுரேஷ்ராஜை தெரியாது என்றும், 2017 ஆம் ஆண்டு தேதி, மாதம் ஞாபகம் இல்லை என்றும், மதியம் 1 மணியளவில் புழல் சைக்கிள் ஷாப் அருகே தான் சென்றுகொண்டிருந்தபோது போலீசார் யாரோ பணத்தை அடித்து பிடுங்கியதை பார்த்தீர்களா என விசாரித்தார்கள் என்றும், தான் பார்க்கவில்லை என கூறினேன் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**ஆ)** அ.சா.2 பாண்டியன் தனது சாட்சியத்தில், தான் லட்சுமிபுரம் பகுதியில் குடியிருந்து வருவதாகவும், தற்போது தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், மேற்படி கையொப்பமானது அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்து, கடந்த 23.10.2017 அன்று மதியம் 1.45 மணிக்கு சைக்கிள் ஷாப் நாகாத்தம்மன் கோயில் அருகே வழக்கு சம்மந்தமாக போலீசார் விசாரித்து கொண்டிருந்தார்கள் என்றும், அப்போது அந்த இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் வரைந்தார்கள் என்றும், தன்னிடம் சாட்சி கையொப்பம் கேட்டார்கள் என்றும், தானும் சாட்சியாக கையொப்பம் செய்து கொடுத்தேன் என்றும், போலீசார் தன்னை விசாரணை செய்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

இ) அ.சா.3 ராம்குமார் தனது சாட்சியத்தில், தான் நங்கநல்லூர் பகுதியில் வசித்து வருவதாகவும், இவ்வழக்கின் விபரம் பற்றி தனக்கு தெரியாது என்றும், தற்போது தன்னிடம் காட்டப்படும் ஆவணங்களில் உள்ள கையொப்பம் தன்னுடையது அல்ல என்றும், போலீசார் தன்னை விசாரணை செய்யவில்லை என்று பிறழ் சாட்சியாக மாறி சாட்சியம் அளித்துள்ளார்.

**ஈ)** அ.சா.4 கபிலன், உதவி ஆய்வாளர், தனது சாட்சியத்தில், தான் தற்போது புழல் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும், இவ்வழக்கினை புலன் விசாரணை செய்த உதவி ஆய்வாளர் சீதாலட்சுமி ஆகியோர்கள் பணிமாறுதலில் சென்றுவிட்டபடியால் கால விரையம் கருதி வழக்கு கோப்புகளை கையாள்வதின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றும், உதவி ஆய்வாளர் சீதாலட்சுமி என்பவர் நிலைய பணியில் இருந்தபோது கடந்த 23.10.2017 அன்று சுரேஷ்பாபு த/பெ காசிராஜன் அளித்த புகாரினை பெற்று புழல் காவல் நிலைய குற்ற எண். 2001/2017 இதச பிரிவு 341, 384, 506(2) முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, மேற்படி புகாரானது அ.த.சா.ஆ. 1ஆகவும், முதல் தகவல் அறிக்கையானது முறையே அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்து, பின்னர் இவ்வழக்கின் சாட்சிகள் ஜோசப், போஸ் ஆகியோரை விசாரித்து தனிதனியே வாக்குமூலம் பதிவு செய்து, பின்னர் மறுநாள் சாட்சிகளான ஆனந்தராஜ், பாண்டியன் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் அவை முறையே அ.த.சா.ஆ.3 மற்றும். அ.த.சா.ஆ.4 ஆக குறியீடு செய்து, பின்னர்

DEEPA P Digitally signed by DEEPA P

எதிரியை அவர் தேடிவந்த நிலையில் 23.10.2017 அன்று கிடைந்த ரகசிய தகவலின் படி கதிர்வேடு பஸ் நிறுத்த்தில் நின்றுக் கொண்டிருந்த எதிரி அருண்குமார் (எ) பென்னின் கைது செய்து விசாரித்த போது எதிரி தன்னிச்சையாக முன்வந்து சாட்சிகள் நிர்மல், ராம்குமார் முன்னிலையில் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தினை கைது செய்த இடத்திலேயே 14.40 மணி முதல் 15.15 மணி வரை பதிவு செய்து அதில் அனுமதிக்கப்பட்ட பகுதியான சம்பவ இடத்தினை காட்டுவதாலும் சம்பவத்திற்கு பயன்படுத்திய கத்தியை ஆஜர் படுத்துவதாகவும் கூறியதன் பேரில் சாட்சிகள் நிர்மல் ராம்குமார் முன்னிலையில் எதிரிகளிடம் இருந்து தடைய பொருட்களானது கைப்பற்றப்பட்டது என்றும், மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதியானது அ.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்து, கைப்பற்றுதல் மகஜரானது அ.த.சா.ஆ. 6 ஆக குறியீடுச் செய்து, எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட தடைய பொருளானது கத்தி ஒன்று நீதிமன்றத்தில் படிவம் 95ன் மூலமாக சான்று பொருளாகவும் RP No. 146/2019 ஆக ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி படிவம் 95னது அ.சா.ஆ.7 ஆகவும், சான்றுப் பொருளான கத்தி ச.பொ.1 ஆக குறியீடு செய்து, பின்னர் சாட்சிகள் நிர்மல் மற்றும் ராம்குமார் ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்து, பின்னர் எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினார் என்றும், பின்னர் இவ்வழக்கின் விசாரணை முடித்து எதிரிமீது இதச பிரிவு 341, 384, 506(2)–ன் கீழ் குற்ற இறுதி அறிக்கையினை தாக்கல் செய்துள்ளேன் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**6)** இவ்வழக்கின் அ.சா.1 முதல் அ.சா.4 அரசு தரப்பு சாட்சிகள் எதிரிக்கு எதிராக பாதகமாக அளித்த சங்கதிகள் குறித்து குவிமுச பிரிவு 313(1)(ஆ)–ன் கீழ் வினவ எதிரி அந்தப்பகுதிகளை பொய் என மறுத்துரைத்தார். எதிரி தரப்பில் சாட்சி உள்ளதா என்று கேட்டபோது இல்லை என்று கூறினார். எனவே எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

**7)** **<u>தீர்வுக்குரிய பிரச்சனை</u>**

**இவ்வழக்கின் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனைகளாவன எதிரியானவர் பிரிவுகள் 341,384,506(ii) இதச பிரிவின் கீழ் தண்டிக்கத்தக்க குற்றங்கள் குற்றமுறையீட்டாளர் தரப்பில் தகுந்த சாட்சியம் மற்றும் சாண்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதாகும்.**

இவ்வழக்கில் கடந்த 23.10.2017–ம் தேதி 12.30 மணியளவில் வாதி சுரேஷ்பாபு என்பவர் வேலை முடித்து வீட்டிற்கு செல்வதற்காக புழல் சைக்கிள் ஷாப் நாகாத்தம்மன் கோயில் அருகில் நடந்து வந்தபோது இவ்வழக்கின் எதிரியான பென்னி (எ) அருண்குமார் என்பவர் வாதியை வழிமறித்து நிறுத்தி பணம் கேட்டுள்ளார் என்றும், வாதி பணம் இல்லை என்று சொன்னதும் எதிரி தன் இடுப்பில் மறைத்து வைத்திருந்த கத்தியை உருவி வாதியின் கழுத்தில் வைத்து இந்த கதிர்வேடு ஏரியா பென்னியை பத்தி உனக்கு தெரியாதா இந்த ஏரியாவே என்னை பார்த்தா நடுங்குன்டா எனக்கூறி வாதியின் சட்டைப்பாக்கெட்டில் கைவிட்டு வாதி வைத்திருந்த பணம் ரூ.500/–ஐ எடுத்துக் கொண்டு போலீசில் கம்பிளைண்டு கொடுத்தீன்னா உன்னை பார்க்கிற இடத்தில் வெட்டுவேன் என கத்தியைக் காட்டி

DEEPA P Digitally signed by DEEPA P

மிரட்டி சென்று எதிரி காரணமாக இருந்து குற்றம்புரிந்துள்ளார். எனவே, எதிரி மீது சட்டப்பிரிவுகள் 341,384,506(ii) இதச பிரிவின் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது.

**8)** அரசு தரப்பில் எதிரிக்கு எதிரான குற்றசாட்டினை பொறுத்து நிரூபணம் செய்வதற்கு அ.சா.1 முதல் அ.சா.4 சாட்சிகளை விசாரணை செய்து, மற்றும் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரை மற்றும் சா.பொ.1 ஆகிய சான்றாவணங்கள் குறியீடு செய்து, எதிரிக்கு எதிரான குற்றம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாக வாதிடப்பட்டது.

**9)** எதிரி தன் மீது பொய்யாக இவ்வழக்கானது பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், தனக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை எனவும், குற்ற சம்பவத்தை பொறுத்து தன் மீது பொய்யாக இவ்வழக்கானது பதிவு செய்யப்பட்டிருப்பதாக கூறி வாதிடப்பட்டது.

**10)** அரசு தரப்பில் ப.சா.1 முதல் ப.சா.8 சாட்சிகள் முன்னிலைப்படுத்தப்பட்டபோதும், அரசு தரப்பில் அ.சா.1 ஆக கண்ணுற்ற சாட்சியும், அ.சா.2 ஆக பார்வை மகஜர் சாட்சியும், அ.சா.3 ஆக ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சியும், அ.சா.4 ஆக புலன் விசாரணை அதிகாரி விசாரணை செய்யப்பட்டு அரசு தரப்பு சாட்சிகள் முடிக்கப்பட்டன.

**11)** இவ்வழக்கின் கண்ணுற்ற சாட்சியாக அ.சா.1 ஆக அரசு தரப்பு விசாரணை செய்யப்பட்டுள்ளார். அ.சா.1 தனது முதல் விசாரணை சாட்சியத்தில் " தனக்கு புகார்தாரர் சுரேஷ்ராஜை தெரியாது என்றும், 2017 ஆம் ஆண்டு தேதி, மாதம் ஞாபகம் இல்லை என்றும், மதியம் 1 மணியளவில் புழல் சைக்கிள் ஷாப் அருகே தான் சென்றுகொண்டிருந்தபோது போலீசார் யாரோ பணத்தை அடித்து பிடுங்கியதை பார்த்தீர்களா என விசாரித்தார்கள் என்றும், தான் பார்க்கவில்லை என கூறினேன் " என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் " எனக்கு சம்பவத்தை பற்றி வேறு ஏதும் தெரியாது என்றால் ஆமாம் " என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**12)** இவ்வழக்கின் பார்வை மகஜர் சாட்சியாக விசாரணை செய்யப்பட்ட அ.சா.2, தனது முதல் விசாரணை சாட்சியத்தில், " தற்போது தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், மேற்படி கையொப்பமானது அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்து, தன்னிடம் சாட்சி கையொப்பம் கேட்டார்கள் என்றும், தானும் சாட்சியாக கையொப்பம் செய்து கொடுத்தேன் " என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் " என்ன சம்பவம் நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் ஆமாம் என்றும், நான் கையொப்பம் செய்ததில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால்

DEEPA P Digitally signed by DEEPA P

ஆமாம் என்றும், போலீசார் கேட்டுக் கொண்டதால் கையொப்பம் செய்தேன் என்றால் ஆமாம் " என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**13)** இவ்வழக்கின் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சியாக விசாரணை செய்யப்பட்ட அ.சா.3 தனது முதல் விசாரணை சாட்சியத்தில் " இவ்வழக்கின் விபரம் பற்றி தனக்கு தெரியாது என்றும், தற்போது தன்னிடம் காட்டப்படும் ஆவணங்களில் உள்ள கையொப்பம் தன்னுடையது அல்ல என்றும், போலீசார் தன்னை விசாரணை செய்யவில்லை " என்று பிறழ் சாட்சியாக மாறி சாட்சியம் அளித்துள்ளார். எனவே அ.சா.1, அ.சா.2, அ.சா.3 சாட்சிகள் சம்பவத்தை பொறுத்து கண்ணுற்ற சாட்சிகள் அல்ல.

**14)** மேற்படி அ.சா.1, அ.சா.2, அ.சா.3, சாட்சிகள் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காமல் சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்று சாட்சியம் அளித்து எதிரியை அடையாளம் தெரியாது என்றே சாட்சியம் அளித்துள்ளனர். எனவே அரசு தரப்பு அ.சா.4 ஆக புலன் விசாரணை அதிகாரி விசாரணை செய்யப்பட்டார். அவர் தன்னுடைய சாட்சியத்தில் அ.சா.1–ன் புகாரினை பெற்று சம்பவயிடம் சென்று சாட்சிகளை புலன் விசாரணை அதிகாரி விசாரணை செய்து அ.சா.ஆ.3 பார்வை மகஜர், அ.சா.ஆ.4 ஆக மாதிரி வரைபடம் தயார் செய்ததினை ஆவணமாக குறியீடு செய்து, சம்பவத்தை பொறுத்து இறுதி அறிக்கை தாக்கல் செய்ததை பொறுத்து அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளித்துள்ளா'ர. இருப்பினும் அவர் அலுவல் சாட்சி ஆவா'ர. மேலும் இவ்வழக்கு சம்பவத்தினை பொறுத்து சம்பவ சாட்சிகள் மற்றும் கண்ணுற்ற சாட்சிகள் எவரும் அரசு தரப்பில் விசாரணை செய்து, அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் முன்னிலைப்படுத்தவில்லை. ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சியான அ.சா.3 தனது சாட்சியத்தில் " இவ்வழக்கின் விபரம் பற்றி தனக்கு தெரியாது என்றும், தற்போது தன்னிடம் காட்டப்படும் ஆவணங்களில் உள்ள கையொப்பம் தன்னுடையது அல்ல என்றும், பிறழ் சாட்சியாக மாறி சாட்சியம் அளித்துள்ள நிலையில், மேற்படி புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தை மட்டும் வைத்துக்கொண்டு எதிரிக்கு எதிரான வழக்கு நிரூபணம் செய்ததாக கருதுவது என்பது நீதியின் பால் உகந்தது அல்ல என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**15)** எதிரி மீதான சட்டப்பிரிவுகள் 341,384,506(ii) இதச பிரிவின் கீழான குற்றசாட்டுகள் அரசு தரப்பில் தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் நிரூபிக்கப்படவில்லை. எனவே எதிரிகள் மேற்படி பிரிவுவின் கீழான குற்றத்தில் குற்றவாளி என்பதனை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு அரசு தரப்பில் நிரூபணம் செய்யவில்லை என்பதால் சந்தேகத்தின் பலனை குற்றவாளிக்கு அளிக்கலாம் என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**<u>முடிவாக</u>**

i) எதிரிக்கு எதிரான இதச பிரிவுகள் 341,384,506(ii) இதச கீழான குற்றசாட்டுகள் குறித்து அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்பதால், எதிரிக்கு சந்தேகத்தின் பலனை நல்கி மேற்படி

DEEPA P Digitally signed by DEEPA P

பிரிவுகளின் கீழ் எதிரி குற்றவாளி அல்ல என முடிவு செய்து குற்றவியல் நடைமுறைச்சட்டம் 248(1)–ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

ii) இவ்வழக்கின் வழக்கு சொத்தான Pl.No.146/2019, தேதி–28.06.2019 கத்தி ஒன்று திருவெற்றியூர் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதை மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு அழிக்க உத்தரவிடப்படுகிறது.

iii) மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு எதிரியால் எழுதிக் கொடுக்கப்பட்ட பிணைபத்திரம் ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026–ம் வருடம் மே மாதம் 26–ம் நாளாகிய இன்று என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

DEEPA P
Digitally signed by DEEPA P

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்ற நடுவர்**

**மாதவரம்**

**அரசு தரப்பு சாட்சிகள்**

| வ.எண் | சாட்சிகளின் விபரம் |
|---|---|
| அ.சா.1 | திரு.போஸ் |
| அ.சா.2 | திரு.பாண்டியன் |
| அ.சா.3 | திரு. ராம்குமார் |
| அ.சா.4 | திரு. கபிலன், உதவி ஆய்வாளர் |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்**

| வ.எண் | தேதி | சான்றாவண விபரம் |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 23.10.2017 | புகார் |
| அ.சா.ஆ.2 | 23.10.2017 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.3 | 23.10.2017 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.4 | 23.10.2017 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.5 | 23.10.2017 | ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி |
| அ.சா.ஆ.6 | 23.10.2017 | கைப்பற்றுதல் மகஜர் |
| அ.சா.ஆ.7 | 28.06.2019 | படிவம் 95 |

எதிரி தரப்பு சாட்சி : இல்லை

எதிரி தரப்பு சான்றாவணங்கள் : இல்லை

சான்று பொருட்கள் : சா.பொ.1 ஆக வழக்கு சொத்தின் கத்தி–1.

**குறிப்பு**

1. எதிரி வழக்கு விசாரணையின் போது பிணையில் இருந்தார்.

2. வழக்கு விசாரணையில் எந்த சாட்சிகளும் மூன்று தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

3. வழக்குச் சொத்துக்கான உத்தரவானது பகரப்பட்டது.

DEEPA P Digitally signed by DEEPA P

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்ற நடுவர்

மாதவரம்

**CC.No.136/2020**

**Dated : 26.05.2026**

**தீர்ப்புரை பகரப்பட்டது**

<u>முடிவுரை</u>

i) எதிரிக்கு எதிரான இதச பிரிவுகள் 341,384,506(ii) இதச கீழான குற்றசாட்டுகள் குறித்து அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்பதால், எதிரிக்கு சந்தேகத்தின் பலனை நல்கி மேற்படி பிரிவுகளின் கீழ் எதிரி குற்றவாளி அல்ல என முடிவு செய்து குற்றவியல் நடைமுறைச்சட்டம் 248(1)–ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

ii) இவ்வழக்கின் வழக்கு சொத்தான Pl.No.146/2019, தேதி–28.06.2019 கத்தி ஒன்று திருவெற்றியூர் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதை மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு அழிக்க உத்தரவிடப்படுகிறது.

iii) மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு எதிரியால் எழுதிக் கொடுக்கப்பட்ட பிணைபத்திரம் ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

DEEPA P

Digitally signed by DEEPA P

மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நீதிமன்ற நடுவர்
மாதவரம்